பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELA NADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No. QB/8945/78

மலர்: 21 மாசி 4 ரபி-அவ் 18 இதழ் 6
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 16-2-79

பெண்களே!
- இறக்குமதி செய்யப்பட்ட அழகிய கைப்பைகள் (HandBags)
- பல வர்ணங்களில் பிளாஸ்ரிக் காப்புக்கள்
- லேஸ் வகைகள், நூல் வகைகள்
- கவர்ச்சிகரமான பிறசியர்ஸ்

யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள;

கிருபா கிவ்ற் கவுஸ்
சோதிடவிலாஸ் கட்டிடம்
46, பெரியகடை யாழ்ப்பாணம்.
KIRUBA GIFT HOUSE,

RECEIVED 1979-2-16 PERIODICALS DIVISION LIBRARY

மாணவர் பிரச்னை

## சர்வதேச பிரச்னையாகுமா?

[யாழ்ப்பாணம்]
தமிழ் மாணவர்களைப் பாதிக்கும் புதிய பல்கலைக்கழக அனுமதித் திட்டத்தை சர்வதேச பிரச்னையாக மாற்றும் வகையில் முக்கிய சில தமிழ் அரசியல் கட்சிகளும், மாணவர் இயக்கங்களும் முயற்சி எடுத்துவருகின்றன.

மணிலாவில் இயங்கும் சர்வதேச மாணவர் இயக்கத்துடன் இப்பிரச்னை தொடர்பாக சில முக்கியஸ்தர்கள் தொடர்பு கொண்டுள்ளனர் என்று தெரிகிறது. [செ]

யாழ். நவீன சந்தைக் கடைகளை

# 'ரெண்டருக்கு விட்டதில் ரூபா 23 லட்சம் வருமானம்!

## ஆகக்கூடிய கேள்வி ரூபா 1 லட்சத்து 7 ஆயிரம்

### எதிர்பார்த்ததைவிட லாபம் ஆதிகமாம்

(யாழ்ப்பாணம்)
யாழ். நவீனமார்கட் 2 ம் பகுதியிலுள்ள 44 கடைகளையும் ரெண்டருக்கு வழங்கியதன் மூலம், யாழ். மாநகரசபைக்கு சுமார் 23 லட்சம் ரூபா கிடைத்துள்ளது.

சுமார் 18 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட நவீன மார்க்கட் கடைகளை ரெண்டருக்கு வழங்குவதன் மூலம் சுமார் 10 லட்சம் ரூபா கிடைக்குமென வரவு-செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. தற்போது 13 லட்சம் ரூபா கூடுதலாகக் கிடைத்துள்ளது.

ஆகக்கூடிய கேள்வித் தொகை ஒரு லட்சத்து ஏழாயிரமாகும். ஆகக்குறைந்த கேள்வித் தொகை 15,000 ரூபாவாகும்.

முக்கிய அலுவலாக காரில் சென்றிருந்த ஆணையாளர் திரு கே. சிவஞானம் நேற்றுமுன்தினம் மாலை 6 மணிக்கு வந்துசேருவார் என எதிர்பார்க்கப்பட்டது.

நவீனமார்க்கட் வழக்கு விசாரணை இம் மாதம் 23-ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டதை தொடர்ந்து, ரெண்டர்கள் நிச்சயமாக உடைக்கப்படும் என்று தெரிய வந்தது.

2 மணிமுதல் கேள்வி விண்ணப்பதாரர்கள், மாநகர சபையை முற்றுகையிடத் தொடங்கினர்கள். நீதிமன்றம் செல்வதும் மாநகரசபைக்கு வருவதுமாகக் காணப்பட்டனர்.

மாலை 6 மணிக்கு ரெண்டர் உடைக்கப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. பெருந்திரளானோர் மாநகரசபை வளவில் காணப்பட்டனர்.

நண்பகல் 12 மணிக்கு காரில் புறப்பட்ட ஆணையாளர் திரு சிவஞானம், இரவு 7-15 மணிக்கு மாநகரசபை வந்தடைந்தார்.

மாநகரசபை மண்டபத்தில் கேள்விப்பத்திரங்கள் உடைக்கப்பட்டது.

அப்போது ஆணையாளர் திரு. கே. சிவஞானம் கச்சேரி காரியாலய உதவியாளர் திரு. அந்தோனிப்பிள்ளை, கணக்காளர் திரு வி. ராஜகோபால், மராமத்து பொறியியலாளர் திரு. இ சண்முகானந்த நடேசன், மின்சார பொறியியலாளர் திரு. சி. ஆனந்த மூர்த்தி ஆகியோர் முன்னிலையில் ரெண்டர் உடைக்கப்பட்டது. விண்ணப்பகாரர்களும், மண்டபத்தில் நிரம்பி வழிந்தனர்.

சரியாக 8-30 மணிக்கு ரெண்டர் உடைக்கப்பட்டது. சரியான நேரத்துக்கு முன், பெட்டிக்குள் போடாத 9 ரெண்டர்கள் நிராகரிக்கப்பட்டது. ரெண்ணர்களைக் கொண்ட 211 என்வலப் உடைக்கப்பட்டு பெயர்,

[6-ம் பக்கம் பார்க்க]

## சீனத் தலைவரை வாஜ்பாய் சந்தித்தார்

பீகிங், பெப். 15
இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. அட்டல் பிகாரி வாஜ்பாய் இன்று சீனத்தலைவரும் பிரதமமந்திரியுமான திரு. ஹுவா குவா பெங்கைச் சந்தித்துப் பேசினர். சீனத்தலைவர் அவரை அன்புடன் வரவேற்று உபசரித்தார்.

திரு வாஜ்பாய் சீனத் தலைவரைச் சந்தித்திருப்பதானது இரு நாடுகளினதும் உறவில் ஒரு முக்கிய திருப்பமாகக் கருதப்பட முடியும் என்று அவதானிகள் கருதுகிருர்கள். ஏற்கனவே சீனத் துணைப்பிரதமர் டெஸ்சியாபெங்கையும் சந்தித்துள்ளார்.

சீன வெளிநாட்டமைச்சருடன் இரண்டு சுற்றுப்பேச்சுக்களே நடைபெறுவதாக இருந்தபோதிலும் திரு வாஜ்பாய் மூன்று சுற்றுக்கள்பேச்சு நடத்தியுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான எல்லைப் பிரச்னைகள் முதற்கொண்டு சகலபிரச்னைகளும் தீர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்பதை இருதரப்பினர்களும் ஒப்புக்கொண்டதாகத் தெரிகின்றது.

திரு. வாஜ்பாய், நாளை ஷாங்காய்க்குப் போகிருர்.

## மாணவர் நடத்தை குறித்து கல்விப்பணிப்பாளர் மகிழ்ச்சி

### அரசுக்கும் நன்றி தெரிவிக்கிருர்

[யாழ்ப்பாணம்]
பாடசாலைகளைப் பகிஷ்கரித்த மாணவர்களின் பிரச்னையில் அரசு சுமுகமாகத் தீர்த்து விட்டது குறித்து வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு மாணிக்கவாசகர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட போதும் அதன் பிறகும் மாணவர்கள் அமைதியைப் பாதுகாத்து ஒழுங்காக நடந்து கொண்டமைக்காக திரு. மாணிக்கவாசகர் நன்றி தெரிவித்தார்.

வடபகுதியில் நடைபெற்ற பாடசாலைகள் பகிஷ்கரிப்பின் காரணமாக எழுந்த நிலைமையையொட்டி கல்விஅமைச்சில் ஆலோசனை நடத்துவதற்காக சென்றிருந்த திரு. மாணிக்கவாசர் நேற்று யாழ்ப்பாணம் திரும்பினர்.

மாணவர்கள் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்த்து வைத்தமைக்காக ஜனாதிபதி ஜே ஆர் ஜயவர்த்தன, கல்வி அமைச்சர் டாக்டர் நிஜங்கா விஜயவர்த்தன, எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் ஆகியோருக்கும் அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

## ஈரான் தலைநகரில் கொள்ளைச் சம்பவங்கள்

### அமெரிக்கப் பிரஜைகள் அவதி

தெஹ்ரான், பெப். 15
ஈரானில் மன்னர் ஆட்சி ஒழிந்து, சமயத் தலைவர் அயத்தொல்லா கொமெய்னியின் ஆதரவு ஆட்சி பதவிக்கு வந்துள்ளபோதிலும் இன்னமும் அமைதியான சூழ்நிலை ஏற்படவில்லை.

தலைநகரில் இன்று பரவலாகக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றன. நகரிலுள்ள கடைகள் பலவற்றை ஆயுதந் தாங்கியவர்கள் கொள்ளையடித்துச் சென்ருர்கள். இதேசமயம் தெப்றஸ் என்ற இடத்தில் இன்று தொடர்ந்தும் மன்னர் ஆதரவுப் படைகளுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் கடும் மோதல் நடைபெற்றுவருகிறது.

இதேசமயம், ஈரானிலுள்ள அமெரிக்க பிரஜைகளை விமானம் மூலம் தாயகம் அனுப்பிவைக்க அமெரிக்கத் தூதரகம் முயன்றுவருகிறது. ஆனல் புதிய அரசாங்கம் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அமெரிக்கப் பிரஜைகளை ஒரு இடத்திற்குப் பஸ்கள் மூலம் கொண்டுவந்து சேர்ப்பதற்குப் புதிய அரசாங்கத்தின் உதவியைத் தூதரகம் கோரியுள்ளது. ஆனல் இப்போதைய நிலையில் ஒன்றும் செய்யமுடியாதென்றும் வசதியேற்படும்போது இதற்கு உதவமுடியுமென்றும் அரசு அறிவித்துள்ளது. அமெரிக்கப் பிரஜைகளும், ஐரோப்பியர்களும் வெளியிடங்களில் நடமாடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

## பேர்ளுட்சொய்ஸா வருகிருர்

[யாழ்ப்பாணம்]
லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச் செயலாளர் திரு. பேர்ளுட் சொய்ஸா இம்மாதம் 23ம் திகதி அரசியல் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இவர் இருதினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் காலத்தில் சுன்னுகம், யாழ்ப்பாணம், பருத்தித்துறையில் அரசியல் கருத்தரங்குகளை நடாத்துவதுடன், கட்சியின் முக்கியஸ்தர்களையும் சந்திக்கவிருக்கிருர். [செ]

ஜி. ஜி. சிலை:

## பொலிஸ் அதிபர் அறிக்கை

[கொக்குவில்]
யாழ். நீதிமன்ற வளவுக்குள் அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் சிலையை நிறுவுவதற்கும்

(6-ம் பக்கம் பார்க்க)

முறையான அறிவித்தல் வரவில்லை

## சில பாடசாலைகள் வகுப்புகள் நடக்கவில்லை

[யாழ்ப்பாணம்]
பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மாணவர்கள் வைத்திய அத்தாட்சிப்பத்திரங்களை சமர்ப்பிக்கத் தேவையில்லையென பத்திரிகைகளில் செய்திவெளியாகி இருந்தபோதிலும் சில பாடசாலைகளில் வழமையான நிலைமை திரும்பவில்லை என்று தெரிகின்றது.

சில பாடசாலைகளில் வகுப்புகளே நடைபெறவில்லையாம். கல்வித் திணைக்களத்திலிருந்து முறையான அறிவித்தல் கிடைக்காமையே இந்த நிலைமைக்குக் காரணமாகும்.

கிராமப் பகுதிகளில் மாணவர் வருகையும் குறைவாகவே இருந்துள்ளது. இதே வேளை யாழ். நகரிலும் இதற்கு அண்மையில் உள்ள சில பாடசாலைகளில் வழமைபோல் வகுப்புகள் நடைபெற்றது. மாணவர்களும் வழமைபோல் பாடசாலைக்கு சென்றுள்ளனர்.

சத்தியாக்கிரகமும் உண்ணவிரதமும் நடைபெற்ற பாடசாலைகளிலும்கூட மாணவர்கள் வரவு வழமைபோல் இருந்ததோடு அங்கும் வகுப்புகள் ஒழுங்காக நடைபெற்றன.

## வரிவிளம்பரம்

### தேவை

சித்தன்கேணி, சங்கானை, வட்டுக்கோட்டையில் பிரதானவீதியில், வீடும் வளவும் அல்லது வீடு கட்டக்கூடிய காணியுடன்விலைக்குத்தேவை, விலைவிபரங்களுடன் எழுதவும்: விளம்பர இல: 1622, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 1622

உளுந்து அரைக்கத் தெரிந்த உதவிச் சமையல் காரன் தேவை. அத்தாட்சிப்பத்திரத்துடன் நேரில் வரவும்: செல்வ விலாஸ், 81, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1621

குறைந்தது 5 வருட அனுபவமுள்ள கணக்காளர் தேவை. தட்டெழுத்து, E.P.Fவேலை, வருமானவரி வேலைகள் தெரிந்தவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். "க. நாகமுத்து அன் சன்", 48, 50, பெரிய கடை, யாழ்ப்பாணம். 1625

### விற்பனைக்கு

தமிழ், ஆங்கில தட்டச்சுப் பொறிகளும், டுப்ளிக்கற் இயந்திரமும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: தெல்லியூர் நடராசா (சோதிடர்), குமாரசாமி வீதி, கந்தர்மடம். 1615

Volkswagan Beetle 1300 பதிவுசெய்யப்படாதது. நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. பின்வரும் இடத்தில் பார்வையிடலாம். சி. அப்புத்துரை, இளைப்பாறிய ஆசிரியர், 'ஆனந்தபவனம்' தேவாலய முன் வீதி, உரும்பராய். 1630

நாச்சிமார் கோவிலுக்கு அண்மையில் கே. கே. எஸ். வீதியில் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும், விளம்பர இல: 1636, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 1636

155, கடற்கரை வீதியில் (Beach Road) உள்ள நாலு பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. காலை 8-30 மணிக்கும் மாலை 4-30 மணிக்கும் இடையில் நேரில் தொடர்பு கொள்ளவும் S. H. இராஜநாயகம், A. S. S. லிமிட், 145, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 1643

## புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் புங்குடுதீவு
## வெற்றுச்சாக்குக் கேள்விப்பத்திரம்

மேற்படி சங்கத்தில் 10,000 வெற்றுச்சாக்குகள் வரை கேள்விப் பத்திரமூலம் விற்பனை செய்வதற்கு இருக்கின்றது விண்ணப்பப் பத்திரத்திற்கு ரூபா 5/-ம், வைப்புப் பணமாக ரூபா 50/-ம் செலுத்தப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் 2?--?79-ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னதாக பதிவுத்தபால் மூலம் என்வலப்பின் இடதுபக்க மூலையில் "கேள்விப்பத்திரம்" என எழுதப்பட்டு பதில் பொது முகாமையாளர், புங்குடுதீவுப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

பதில்பொதுமுகாமையாளர்.
13-2-79 1634

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாண பங்கசால் வீதி 103ம் இலக்கத்தை சேர்ந்த பொன்னம்பலம் துரையப்பா என்பவரின் மரணசாதனமில்லாத மரணச் சொத்தினதும் உடமைப் பொருட்களினதும் விடயத்தில்

[மரணமெய்திவயர்
திருமதி பங்கையவல்லி துரையப்பா, 103, பங்கசால் வீதி, யாழ்ப்பாணம்.

இல: மரணசாதன நியாயாதிக்கம் இல/3410 ரீ
மனுதாரர்

மேலே கூறப்பட்ட இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது. அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டுமாசிமாதம் 23ம் நாளன்று முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளைப்படி ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1979ம் ஆண்டு மாசி மாதம் 9ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

தயாரித்தவர்
மு. மயில்வாகனம்,
மனுதாரின் சட்டத்தரணி.
1635

செல்வி
எஸ். அபிமன்னசிங்கம்
சட்டத்தரணி,
சித்தாவத்தை
உடுவில்

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பையா வீரசேகரம் என்னும் வீரசேகரம்பிள்ளை என்பவரின் மரணசாதனத்தின்விடயத்தில்

மரணமெய்தியவர்

ஆனைக்கோட்டைச் சந்தியைச் சேர்ந்த வீரசேகரம் கைம்பெண் மகேஸ்வரி
மனுதாரர்.

மரணசாதனம் )
நியாயாதிக்கம் ) இல. 3428

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1979ஆம் ஆண்டு மாசி மாதம் 21ஆந் நாளான்று முற்பகல் 9மணிக்கு இந்நீதிமன்றத்தின்முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென் பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

1977ஆம் ஆண்டு மாசி மாதம் 9ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது 1632

## வலி-கிழக்குதென்பகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கம்
## வெற்றுச் சாக்கு கேள்விப்பத்திர அறிவித்தல்

ஷெ சங்கத்தில் வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு 1979-02-26 திங்கட்கிழமை நண்பகல் 12மணிவரை கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்களை 1979-02-23 வரை ஷெ சங்கக் கந்தோரில் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி விண்ணப்பப் பத்திரம் ஒன்று ரூபா 1/-ம் வைப்புப் பணமாக ரூபா 250/-ம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக நிபந்தனைகளையும், விபரங்களையும் ஷெ சங்கக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப் பத்திர விண்ணப்பங்கள் யாவும் "பொது முகாமையாளர், வலி-கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இக்கேள்விப் பத்திரம் சங்கத்தால் நிராகரிக்கப்படுவதற்கு உரிமையுண்டு, தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும்.

பொதுமுகாமையாளர்.
நீர்வேலி,
1979-02-14. 1633

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் என்னுமிடத்தைச்சேர்ந்தசிவானந்தன் பெண் கனகாம்பிகை என்பவரின் மரணசாதனத்தினதும் எழுத்தாவணத்தினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்க இலக்கம்: ரி / 5

அப்பாத்துரை சிவானந்தன், மல்லாகம்.
மனுதாரர்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால்அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு மார்ச் மாதம் 2ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக்காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக்கட்டளைப்படி
(ஒப்பம்)
ஆர். ஜெயராஜசிங்கம்,
பதிவாளர்.

தயாரித்தவர்
(ஒப்பம்)
சு. நடராசா,
மனுதாரின் சட்டத்தரணி.
1631

## கிளிநொச்சியில் பெண் கொலை

[கிளிநொச்சி]
தாலிகட்டிய மனைவியையே வெட்டிக்கொன்றாராம் ஒருவர். மரணமான செங்கையம்மா என்ற பெண்ணின் கணவரான சுந்தரம் துரைராசா சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் கிளிநொச்சியில் நடைபெற்றது.

## ஜேர்மன் மொழி ஆரம்ப வகுப்புகள்

விபரங்கட்கு:
நடராஜா ஜெயபாலன்,
பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
1637

## கணக்காளர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கு பெண் பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### தகைமைகள்

1. க. பொ. த. சாதாரணதரத்தில், எண்கணிதம், வர்த்தக கணிதம், கணக்கியல், தூயகணிதம் இவற்றில் ஏதாவது ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் 6 பாடங்களில் சித்தி.

   அல்லது

   க. பொ. த. சாதாரண தரத்துடன் தொழில் நுட்பக் கல்லூரியில் கணக்கியலில் டிப்புளமா பயிற்சியில் சித்தியுடன்
2. குறைந்தது இருவருடங்கள் கணக்கு வைக்கும் முறையில் அனுபவம் கூட்டுறவுப் பயிற்சி பெற்றவர்களுக்கும், ஆங்கில அறிவு உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளம்: தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படுவதுடன், உணவு தங்குமிட வசதிகளும் அளிக்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 23-2-79

அமைப்பாளர்,
1642 சர்வோதய ஆச்சிரமம், புங்குடுதீவு.

## பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு அறிவித்தல்

இலங்கைப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களாகப் பதிவுசெய்து இவ்வருடம் மே மாதத்தில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும். 1978-ம் ஆண்டிற்கான சகல முதல், இறுதித் தேர்வுகளுக்கும் தோற்றவுள்ள சகல தமிழ் மாணவர்களும் அவர்களின் நன்மை கருதி

"கருத்தரங்குகளை"

நடாத்த ஒழுங்குகள் செய்யும் பொருட்டு எம்முடன் தபால்மூலம் மட்டும் தொடர்பு கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம். கருத்தரங்கு யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இரு இடங்களிலும் நடைபெறும்.

மேலதிக பதிவாளர்,
வெளிவாரிப் பட்டப்படிப்புகள் நிறுவனம்,
5, ரம்மியா வீதி, கொழும்பு - 4.
1644

## தேவை

மீன்தூள் உற்பத்தியாலையை நிர்வகித்து நடாத்துவதற்கு ஆற்றலுடைய ஒருவர் கீழ் வரும் பதவிக்கு உடனடியாகத் தேவைப்படுகின்றது.

பதவி:- உற்பத்தி முகாமையாளர் தரம் - 1

கல்வித்தகைமைகள்:- 1. அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலையில் பட்டம் பெற்ற விஞ்ஞானப் பட்டதாரி

அல்லது

2. இறுதித் தேர்வு விஞ்ஞானப் பட்டப்பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்பவர்

வயது: 25க்கும் 35க்கும் இடையில் இருக்கவேண்டும்

சம்பளம்: ரூபா 500 — 825 / 20/10, 25/5

(எல்லாப் படிகளும் சேர்க்கப்பட்ட மாதாந்த முழுச்சம்பளம் ரூபா 640/-, கூடிய தகைமைகளுடன் அனுபவம் உள்ளவருக்கு மாதாந்தச் சம்பளம் மேற்படி சம்பளத் திட்டத்தில் பொருத்தமான ஓர்முனையில் ஆரம்பிக்கப்படும். சரியானநபருக்கு சிறந்த முன்னேற்ற வாய்ப்பு உண்டு.

நற்சாட்சிப் பத்திரங்கள்: சமீப காலத்தில் பெறப்பட்ட 2 நற்சாட்சிப் பத்திரங்களுள் ஒன்று அப்பகுதி உதவி அரசாங்க அதிபரிடம் பெறப்பட்டதாய் இருக்க வேண்டும்.

பிணை:- காசுப்பிணை ரூபா 2000/-
ஆதனப்பிணை:- ரூபா 10,000/-
விண்ணப்ப முடிவு திகதி:- 28-02-79.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

தலைவர்,
வடமாகாணக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்,
25, முன் வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- விண்ணப்பங்களை அனுப்பும்போது தபால் மேல் உறையில் இடதுபக்க மேல மூலையில் பதவியின் பெயர் குறிப்பிடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

பிரதான குறிப்பு:- 14-2-79-ந் திகதி பத்திரிகையில் பிரசுரமான உற்பத்தி முகாமையாளர் தரம்-I பதவிக்கான விளம்பரம் இத்தால் ரத்துச் செய்யப்பட்டு சரியான விளம்பரம் மேலே பிரசுரிக்கப்பட்டுள்ளது 1614

# உலகஅகதிகள்முகாமில்காணுதபரிதாபநிலையை கிழக்கிலங்கையில் கண்டேன்!

## பிரித்தானிய "நியூஸ்டேட்ஸ்மன்" பத்திரிகை வெளிநாட்டு ஆசிரியர் கருத்து

லண்டன், பெப். 15

இலங்கையில் அண்மையில் ஏற்பட்ட சூருவளியினுல் பாதிக்கப்பட்டவருக்கு நிதி சேகரிக்கும் முகமாக மத்திய லண்டனில் கஞேட் அவையில் ஒழுங்குசெய்யப்பட்ட இராப்போசன நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தனது நேரடி அனுபவங்களை விளக்கிய பிரித்தானிய சோசஷலிச இயக்கக் குரலான "நியூஸ்டேட்ஸ்மன்" பத்திரிகையின் வெளிநாட்டுச் செய்தி ஆசிரியர் கிறிஸ்தோபர் சிச்சின்ஸ் "உலக அகதிகள் முகாம்களில் காணுத பரிதாப நிலையை, கிழக்கிலங்கையில் கண்டேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

லண்டன் கார்டியன் பத்திரிகை நிறுவனத்தின் பிரதிநிதி மாட்டின் வாக்கர், கூட்டத்திற்குத் தலைமை தாங்கினுர் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் பொப எட்வேட், ஸ்டன்நியூ வென்ஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

"வியட்நாமிலும், மத்திய கிழக்கிலும் சைப்பிரசிலும் தென் அமெரிக்காவிலும் உள்ள அகதி முகாம்களிலெல்லாம் காணுதபரிதாபகரமான நிலையிலுள்ள மக்களைக் கிழக்கிலங்கையில் கண்டேன். தார்மீக அரசாங்கமென்று தன்னைப் புகழ்ந்துகொள்ளும் ஜே. ஆர் அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்கள் மீது கடைப்பிடிக்கும் கொள்கையை என்னுற் புரிந்து கொள்ள முடியாத விளுதைமாக உள்ளது. சுவிற்சர்லாந்து அரசாங்கம் ஒருவிமானத்தில் பால்மா புட்டிகளை நிறைத்து அனுப்பியிருந்தும் அவை எதுவும கிழக்கிலங்கையிலே வழங்கப்படவில்லை. கொழும்புத் தெருவோரங்களில் கள்ள விலைக்கு அவை விற்கப்படுகின்றன. பதினுறுயிரங் கூடாரங்களை வெளிநாட்டு அரசாங்கங்கள் அகதிகளுக்கு வழங்கியிருந்தும் என்னுல் 12 கூடாரங்களேனும் மட்டக்களப்பில் பார்க்க முடியவில்லை" என்று கிறிஸ்தோபர் குறிப்பிட்டார்.

வரவேற்புரை நிகழ்த்திய இலங்கை பல்கலைக்கழகத்தின் முன்னை நாள் விரிவுரையாளர் கலாநிதி நித்தியானந்தன்; அவலப்பட்டுள்ள அகதிளுக்கு ஆதரவளிக்குமாறு உருக்கமான வேண்டுகோளை விடுத்தார்.

அடுத்துப்பேசிய ஏகாதிபத்திய எதிர்ப்பு அணியின் நிறுவனமாகிய லிபரேஷன் பிரதிநிதி டோனி கில்பர்ட்; தொழிற்கட்சியின இடதுசாரி இயக்கங்களினதும் தொழிலாளர் இயக்கத்தினதும் ஆதரவைத் திரட்டுவதாக உறுதியளித்து, ஒரு தலைமுறையாக சிறுபான்மையின' என்ற காரணத்தினுலே படிப்படியாக தமது அடிப்படை உரிமைகளையும் நிலங்களையும் சொத்துடைமைகளையும் பறிகொடுத்து வந்த அப்பாவி மக்கள் இயற்கையினுலும் வஞ்சிக்கப்பட்டமை 'மிகவும் பரிதாபத்திற்குரியது" என்று குறிப்பிட்டார். முடிவில் பேராசிரியர் ஆறுமுகம் நன்றிநவில்கையில் ஈழத்தமிழர் ஓராண்டுக்குள் இரு தடவைகள் அகதிகளாயினர் என்று குறிப்பிட்டார்.

## இன்றைய பலன்

மாசி மாதம் 4ம் திகதி
(16-2-1979)
வெள்ளிக்கிழமை

மேடம்: வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை காணப்படும், தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம், திடீர் பிரயாணத்திற்கும் இடமுண்டு, உடல்நலம் பாதிக்கப்படக்கூடும், சுகாதாரம் வேண்டும்.

இடபம்: புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும், தொழில் துறையில் புதிய சாதனை உருவாகும், கற்றவர்கள் ஆதரவு தப்பாமல் கிடைக்கும், இடமாற்றத்திற்கான வழிவகைகள் மேற்கொள்ளப் படலாம்.

மிதுனம்: வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவீர்கள், தொழில்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும், எதிரிகள் மத்தியில் ஏற்படும் மனமாற்றம் உங்கள் செல்வாக்கை வளர்க்கும்.

கடகம்: இனிமையின் அழைப்பு இன்று உங்களுக்குக் கிடைக்கும், இல்லம் பல்கலைக் கழகமாக மாறும், அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும், களஸ்திர வழியாலும் கண்ணியம் சேரும்.

சிங்கம்: நிதியில் முடக்க மேற்படும் சிலர் வீண் பழிக்கும் இலக்காவார்கள், விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவை எடுக்கும், பயிர்ச் செய்கையில் பாதிப்பு ஏற்படலாம், துணிச்சலுடன் எதிர் நீச்சல் போட்டால் வெற்றியுண்டு.

கன்னி: வாழ்க்கை புதிர் நிறைந்ததாகவே இருக்கும், எடுத்த காரியம் இறுதி நிமிடத்தில் ஏமாற்றத்தை அளிக்கும், நல்லதைச் செய்தினும் வீண்பழி கேட்க நேரிடும், வெளியிடத்துக் கடிதம் வேதனையைத் தரலாம், திடசித்தம் வேண்டும்.

துலாம்: ஆராய்ச்சியாளர்களுக்குப் பொன்னுன தினம், அறிவுத்தாகம் மேலிடும், இனபந்துக் கொண்டாட்டங்களும் இடம்பெறும், சிலர் புதிய வாகனமொன்றை கொள்வனவு செய்வதில் கருத்தைச் செலுத்துவர்.

விருச்சிகம்: திட்டமிட்டுச் செயல்பட விரும்புவீர்கள், எனினும் பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு, நண்பர் ஒருவர் உமது நலனைக் கெடுப்பதற்கு முனைவர், உடலில் சோர்விற்கு இடமேற்படும்.

தனுசு: நல்லதைச் செய்வீர்கள், நலன் பெருகும், பிரமுகர்கள் உங்களைத் தேடி வருவார்கள், சமூகத்தில் மதிப்பு உயரும், அரசியல் வாதிகள் அதிர்ஷ்ட தேவதைகளை அணைத்துக்கொள்வர்.

மகரம்: புத்திக் கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும், புத்திரர்களால் புகழும் கிடைக்கும், இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் இனிமை தவழும்.

கும்பம்: குடும்பத்தில் குறைகேட்க நேரிடும், மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று இன்று அம்பலமாகலாம், சிலருக்கு விரக்தி மனப்பான்மையும் தென்படும், பொறுமையுடன் நடப்பது நல்லது.

மீனம்: தாம்பத்திய வாழ்க்கையில் அதிக ஒற்றுமைக்கு இடமுண்டு, காதலர்களாயின் இன்பமான சூழ்நிலை தென்படும், பெற்றோர்களாயின் ஆதரவும் கிடைக்கும். தொழில்துறையிலும் வெற்றியுண்டு.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## யாழ். மாவட்ட கால்நடை வளர்ப்புத்திட்டம்

(உடுப்பிட்டி)

யாழ். மாவட்டத்தில் கால்நடை வளர்ப்புத் திட்டம் துரிதமாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான முயற்சிகளில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்ணுண்டோ ஈடுபட்டுள்ளார்.

நிக்கவரெட்டியாவிலுள்ள பண்ணையிலிருந்து காளை மாடுகள் இம்மாவட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டும், செயற்கை முறைச் சினைப்படுத்தல் துரிதப்படுத்தப்பட்டும் உயர் இன மாடுகளை விருத்தி செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. தற்போது பண்ணையாளர்களை ஊக்குவிப்பதற்கான செயல் முறைத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

## ச. ச. நிலைய நிர்வாகிகள்

[யாழ்ப்பாணம்]

நாவாந்துறை சென்மேரிஸ் சன சமூக நிலைய புதிய நிர்வாக சபைத் தெரிவுக் கூட்டம் தற்காலிக தலைவர் திரு. சூ மாற்கு தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாக அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: ம அருமத்துரை, உப தலைவர்: ச நீக்கிலாஸ், செயலாளர்: டானியல் அன்ரனி, உதவிச்செயலாளர்: ப தித்தூஸ், பொருளாளர்: சூ மரியதாஸ், விளையாட்டுத் தலைவர்: தே விகோரி, கலை அரங்கத் தலைவர்: ம செ மைக்கேல்தாஸ், சுகாதார அதிபர்: அ ராசசிங்கம். வாசிகசாலை அதிபர்: கி பாக்கியநாதர். கணக்குப் பரிசோதகர்; அ பாலு [அ]

## கொள்வனவு

(உடுப்பிட்டி)

புலோலி, தொண்டமனுறுப் பகுதிகளில் பல மாதகாலமாக விற்பனை செய்யப்படாமல் தேங்கிக்கிடந்த 60,000 இருத்தல் பிடிப்புகையிலையை, பிடிப்புகையிலைக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்துள்ளது.

உடுப்பிட்டித் தொகுதியில் உள்ள புலோலி கமநலச்சேவை நிலையப்பகுதி விவசாயப் போதனுசிரியர் திரு. ஆர் தில்லையம்பலத்தின் முயற்சியைத் தொடர்ந்து பிடிப்புகையிலைக் கூட்டுத்தாபனம் இங்கு பலகாலமாக விற்பனை செய்யப்படாமல் முடங்கிக் கிடந்த பிடிப்புகையிலையைக் கொள்வனவு செய்துள்ளது.

# மக்கள் கருத்து

## சமாதானநீதவான்விவகாரம்

1-2-79 'ஈழநாடு' "மக்கள் கருத்து'ப் பகுதியில் வெளிவந்திருந்த 'மானிப்பாய்த் தொகுதி மக்களின் அவதி' என்ற கடிதம் தொடர்பாக நானும் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

மானிப்பாய்த் தொகுதியிலுள்ள ஒரு கிராமமே சங்குவேலி. இங்கேஒரேயொருசமாதான நீதவானே இருந்தார். அவரும் 1970க்குப் பின்னர்நியமிக்கப்பெற்றவர் என்ற காரணத்தினுல் இந்த அரசாங்கம் அவரது நியமனத்தை இடைநிறுத்தி வைத்துவிட்டது இப்பொழுது எமது கிராமத்தில் சமாதானநீதவான் என்று எவருமே இலர் சமாதான நீதவான்களைத்தேடி இங்குள்ள மக்கள் வேறு எங்காவதுதான் அலையவேண்டியுள்ளது.

இத்தனைக்கும் எமக்குச் சமாதான நீதவானுக இருந்தவர் (திரு.கா.கந்தசாமி) எந்தவித அரசியல் அடிப்படையிலும் நியமிக்கப்பட்டவரல்லர். அரசாங்க சேவையில் பல ஆண்டுகள் பணிபுரிந்து, கடைசியாக யாழ்ப்பாணம் கச்சேரியில் அலுவலக உதவியாளராகவும் பதில் சுங்கச் சேகரிப்பாளராகவும் இருந்து இளைப்பாறியவர். இளைப்பாறியதும், அவரது சேவைகளைக்கருத்திற்கொண்டு அரசாங்க அதிபர் போன்றவர்களின் சிபார்சின் பேரில் எமது கிராமத்துக்குச் சமாதான நீதவானுக நியமனம் பெற்றவர். இக்காரணங்களையெல்லாம் நீதியமைச்சருக்கு இங்குள்ள மக்களும், மக்கள் இயக்கங்களும் விளக்கி, அவரையே மீண்டும்எமக்குச்சமாதானநீதவானுக நியமிக்குமாறுவேண்டியிருந்தன. தொகுதிப்பிரதிநிதிக்கே இதில் முழுஅதிகாரத்தையும் அரசாங்கம் வழங்கியிருப்பதால், பல தடவைகள் அவரையும் சென்று சந்தித்து எமது கோரிக்கையைவலியுறுத்தினேம்.

எமது பேரவை உறுப்பினரும் எமது கோரிக்கையிலுள்ள நியாயத்தை ஏற்றுக்கொண்டார். என்னும், தமது இயக்கம் சமாதான நீதவான்களாக யாரையும் சிபார்சு செய்வதில்லை என்றும், அவர்களது பாராட்டுவிழாக்களில் கலந்து கொள்வதில்லை என்றும், சிறிமா ஆட்சிக்காலத்தில் ஒரு தீர்மானம் எடுத்திருப்பதைக் குறிப்பிட்டு, அத்தீமானத்தை இப்போது மறுபரிசிலனைசெய்ய வேண்டி வந்திருப்பதாகவும் அப்படிச் செய்தபின்னர் முதலாவதாக எமது வேண்டுகோளை நிறைவேற்றிவைப்பதாகவும் சொன்னுர்.

இதன்பின்னர், கிளிநொச்சிப் பிரதிநிதியின் சிபார்சில் சமாதான நீதவான்களாகவந்தவர்கள் பற்றிய செய்திகள் பத்திரிகைகளில் வந்திருந்தன. அதனைப் பேரவை உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வந்து, 'இனிமேல் எமது வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கலாம் தானே' என்று கேட்டோம் அதற்கு அவர் தாம் முன்னர் குறிப்பிட்ட தீர்மானத்தைக் கூட்டணி எடுக்கவில்லை; தமிழரசுக்கட்சியே எடுத்தது என்ருர். எனினும் தாம் எதிர்க்கட்சித் தலைவருடன் ஆலோசித்துவிட்டு, விரைவில் சில பழையவர்களுக்கும் பல புதியவர்களுக்கும் சிபார்சு செய்யப் போவதாகச் சொன்னுர் ஆனுல் ஒன்றுமே நடக்கவில்லை.

அதற்குப்பின்னரும் முல்லைத்திவு, சாவகச்சேரி, ஊர்காவற்றுறை இப்படி கூட்டணியிலுள்ள தமிழரசுக்கட்சிப்பிரதிநிதிகளின் தொகுதிகளிலும் பல சமாதான நீதவான்கள் நியமனம் பெற்றனர். நாமும் அடிக்கடி இது சம்பந்தமாக எமது பிரதிநிதியைச் சந்தித்து வலியுறுத்திக்கொண்டே இருக்கிறோம். ஆனுல் அவர் இன்னமும் இதுகுறித்து வாளா விருப்பது ஏனே தெரியவில்லை. கடைசி முயற்சியாக எதிர்க்கட்சி முதல்வரிடமும் இதைக் கொண்டு சென்ருேம். அவரும் கவனித்ததாகத் தெரியவில்லை.

த. செல்லத்தம்பி
சங்குவேலி.

## சிறப்பு மலரைச் சுவைத்தோம்

20ம் ஆண்டு நிறைவில் 28 பக்கங்களோடு தமிழ்ஈழத்தின் தன்னிகரில்லா 'ஈழநாடு' தனிச் சிறப்போடு வந்தது கண்டு பெருமையும் நிறைவும் பெருமிகக்கொண்டோம். கையில் பத்திரிகையை எடுத்ததுமே முழுவதையும் படித்துமுடித்து விடவேண்டும் போல் மனத்தில் ஓர் ஆசை. பொறுமையோடு எல்லாவற்றையும் படித்து முடித்த பின் விமர்சனம் சொல்லமுயல்கிறேன்,

முதல் சபாஷ் திரு. கா. யோகநாதன் அவர்களுக்குத் தான். அருமையான 'நெஞ்சில் ஆடும் நினைவலைகள்" படித்த பின் எங்கள் நெஞ்சிலும் ஆடிக்கொண்டிருக்கிறதே! அப்படி... ரசிகர்கள் நெஞ்சில் பதிந்து ஆடும் வண்ணம், அழகாக, சுவையோடு எழுதிக்கொண்டு போயிருக்கின்ருர். அந்தக் கெட்டித்தனத்திற்கு முதல் சபாஷ்! "நானும் ஒரு டி. வி. தான்" என்ருர். ஆமாம்! ஒப்புக்கொள்கின்ரேம். ரசிகர்களே... நேரில் பார்த்துக் கொண்டிருப்பதுபோல் ஞானே... அனுபவத்தை சுவையோடு சொல்லிக்கொண்டு போகின்ருர். அவரின் அனுபவம் எதுவுமே மனதில் நிலைக்க மறுத்து நழுவிக்கொள்ளவில்லை. அப்படி ஓர் இனிமை சொல்லுகின்ற விதத்தில்! 'அனுராதபுரத்தில் பெற்ற அனுபவம்...' படித்துக் கொண்டு போகின்ரேம்; ஆரம்பித்ததும் நெஞ்சில் எண்ணம் புரள ஆரம்பிக்கின்றது. "நல்ல இக்கட்டில்போய் மாட்டிக்கொண்டிருக்கிருர். நன்ருகவாங்கிக்கொண்டுதான் வந்திருப்பாரோ...!" என்று தொடர்ந்த எம் கற்பனையை உதறிவிட்டுப்படிக்கின்ரேம் அந்தப்பயங்கர அனுபவத்தில் கூட... எங்களைச் சிரிக்கவைக்கின்ருர் பாருங்கள்... அடக்க முடியவில்லையே! எங்களையும் மீறிச் சிரிப்புத் தெறித்துவிடுகின்றது. ஆழிக்குமரன் ஆனந்தனின் நடைப்போட்டிக்குக்கூட ஒரு சவால்! நாங்கள் நம்பவில்லை... இவர் நடந்துதான் போயிருப்பார் என்று! எடுத்திருப்பார் ஓட்டம்...! என்ன? அப்படித்தானே! 2-வது சபாஷ்! திரு. மகானுக்கு.

[4-ம் பக்கம் பார்க்க]

# ஈரானில் தொடர்ந்தும் கலவரங்கள்!

## வானொலி, டெலிவிஷன் நிலையங்கள் சேதம்

தெஹ்ரான், பெப். 15

ஈரானில் அயத்தொல்லா கொமேனியின் ஆதரவாளர்களுக்கும் மன்னர் ஷாவின் ஆதரவாளர்களுக்கும் இடையே பெரும் மோதல்கள் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தெஹ்ரானில் உள்ள முக்கிய வானொலி நிலையம் ஒன்று ஷா ஆதரவு படைகளினால் கைப்பற்றப்பட்டு பின்னர் புதிய அரசின் படைகளினால் மீட்கப்பட்டது.

### யு. எஸ். தூதரகம் தாக்கப்பட்டது

இதேபோன்று அமெரிக்க தூதராலயமும் எதிர்ப்புப் படைகளினால் கைப்பற்றப்பட்டு பின்னர் அரசு படைகளினால் மீட்கப்பட்டது. இடதுசாரிக் கொரில்லாக்களே தூதரகத்தைத் தாக்கினார்களாம்.

ஈரானில் உள்ள பெரிய பள்ளிவாசல் ஒன்றும் சேதப்படுத்தப்பட்டது.

### 100 பேர் வரை பலி!

பலத்த துப்பாக்கிச் சண்டை இடம்பெற்ற தைப்பிரிஸ் மாவட்டத்தில் 100க்கு அதிகமானோர் பலியாகினர் என்றும் அறிவிக்கப்பட்டது. [இ]

# வேலைநிறுத்தத்தை கைவிடுக

## சமயத்தலைவர் கோரிக்கை

தெஹ்ரான், பெப். 15

வேலைநிறுத்தங்களை கைவிட்டு உடன் வேலைக்குத் திரும்புமாறு ஈரானிய சமயத் தலைவர் அயத்தொல்லா கொமேனி வேலைநிறுத்தக்காரர்களைக் கோரியுள்ளார்.

வானொலி மூலம் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஈரானில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களைத் தாக்கவேண்டாம் என்றும் கொமேனி நாட்டு மக்களைக் கோரியுள்ளார். [இ]

# சீன-இந்திய நட்புறவு

## ஆசிய உறுதிப்பாட்டை பலப்படுத்தும்

### நவசீன செய்தி ஸ்தாபனம் கருத்து

பீக்கிங், பெப். 15

இந்திய-சீன நட்புறவு ஆசியாவின் உறுதிப்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் பேருதவியாக இருக்கும்.

இவ்வாறு நவசீன செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்திய வெளிநாட்டமைச்சர் திரு ஏ. பி. வாஜ்பாயின் சீன விஜயம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே நவசீன செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய இந்திய-சீன உறவை சீன மக்கள் பெரிதும் மதிக்கிறார்கள் என்றும் கடந்த கால குரோதங்களை மறந்து மீண்டும் இந்தியாவுடன் நட்புறவு கொள்ளவே அவர்கள் விரும்புகிறார்கள் என்றும் செய்திஸ்தாபனம் தமது கட்டுரையில் தெரிவித்துள்ளது. [இ]

# சீன-இந்திய உறவுகள்: வாஜ்பாய் பேட்டி

பம்பாய், பெப் 15

'மூன்றும் நாடுகளுடன் இந்தியா வைத்துள்ள உறவுகளை பேரம்பேசி, சீனாவுடன் உறவுகளை சுமுக நிலைக்குக் கொண்டுவர இந்தியா தயாரில்லை' என்று வெளிவிவகார அமைச்சர் வாஜ்பாய் 'பிளிட்ஸ்' வார ஏட்டுக்கு அளித்துள்ள பேட்டியில் வலியுறுத்தியிருக்கிறார்.

'அமெரிக்கா, ஜப்பான், சீனா நாடுகளைக் கொண்ட கூட்டணியொன்றை சீனா, அமைக்க முயலுவது உலக சமாதானத்தை பலப்படுத்த உதவியாய் இராது கூட்டணிகள் அமைதியைக் குலைத்து பதட்ட நிலையை உருவாக்கும் இயல்புடையவையாகும்' என்று அவர் விளக்கினார்.

'இனவாதம், இனஒதுக்கல் ஆகியவற்றை மூர்த்தண்யமாக இந்தியா எதிர்க்கிறதென்றும் சுதந்திரத்தையும் சமாதானத்தையும் வென்றெடுக்க போராடும் என்றும் அவர் மேலும் கூறினார்

சோவியத் யூனியன்-இந்திய உறவுகள் பற்றி அவர் பிரஸ்தாபிக்கையில், 'இந்த உறவுகள் என்றும் நேசமானதாக இருந்து வந்துள்ளன இந்த உறவு காலத்தின் சோதனையை வென்றது. சோதனைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நெருக்கடி சூழ்ந்த நிலைமையில் இந்தியாவுக்கு சோவியத் யூனியன் நேசக்கரம் நீட்டியது எமது தொழிற்துறையை கட்டியெழுப்பவும் சோவியத் யூனியன் உதவியளித்து வந்துள்ளது. ஜனதா ஆட்சிக் காலத்தில் இந்த உறவுகள் பலப்படுத்தப்பட்டதுடன் வியாபிதமடையவும் செய்தது' என்று வாஜ்பாய் கூறினார்.

பீகிங் உறவுகள் பற்றி மீண்டும் குறிப்பிடுகையில் ஏனைய நாடுகளுடன் இந்தியாவுக்குள்ள உறவுகளில் சீனா தலையிட அனுமதிக்கப்பட மாட்டாது என்று அவர் கூறினார்.

1962-ம் ஆண்டு சீன-இந்திய எல்லைப் போரைத் தொடர்ந்து பல ஆயிரம் சதுர மைல் நிலத்தை சீனா கைப்பற்றி, திருப்பியளிக்க மறுத்ததற்குப் பின்னர் இந்திய ராஜியத் தலைவர் ஒருவர் பீகிங் செல்வது இதுவே முதல் முறையாகும். தமது சீன விஜயம் 'விஷயத்தை கண்டு அறியும்' பிரயத்தனமொன்று இருக்கும் என்று வாஜ்பாய் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் வட-கிழக்கு எல்லைகளில் சில பக்கபலம் பெற்ற நாகா பிரிவினை வாதிகளின் ஆயுதமேந்திய தாக்குதல்கள் உக்கிரமுற்று தப்பின.

திபெத்தில், சீன-இந்திய எல்லையில் சீனப்படைப் பிரிவுகள் குவிக்கப்பட்டு ஆயத்த நிலையில் குவிக்கப்பட்டிருப்பதாக துணைப்பிரதமரும், பாதுகாப்பு அமைச்சருமான ஜகஜீவன்ராம் பாராளுமன்றத்தில் அறிவித்துள்ளார்.

# ஒரே மண்டபத்தில் 32 திருமணங்கள்

சென்னை, பெப். 15

இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சமூகங்களைச் சேர்ந்தோரின் 32 திருமணங்கள் நேற்று சென்னையில் ஒரே சமயத்தில் நடைபெற்றன.

இந்துசமூகத்தைச் சேர்ந்தவர்களில் கூடுதலானோர் கலப்புத் திருமணம் செய்தனர்.

இத்தம்பதிகளுக்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசுப் பொருட்களை தமிழக அரசு வழங்கியது.

(இ)

# 300 பேர் கைது

புதுடில்லி, பெப். 15

ஜம்மு பகுதியில் கடந்த 2 நாட்களாக இடம்பெற்ற கலவரங்களை அடுத்து 300 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர். [இ]

# விடுதலை வீரர் மரணம்

புதுச்சேரி, பெப். 15

புதுச்சேரி யூனியன் பிரதேச அரசின் முதலாவது சபாநாயகரும் விடுதலைப் போராட்ட வீரருமான திரு. புருஷோத்தம ரெட்டி நேற்று சென்னையில் தமது 74-வது வயதில் மாரடைப்பால் காலமானார். [இ]

# கத்தியால் குத்திக் கொண்டனர்

[கொக்குவில்]

மதுபோதையில் ஒருவரை ஒருவர் கத்தியால் குத்திக் கொண்டனராம்!

இருவரும் இப்பொழுது யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொக்குவிலைச் சேர்ந்த எஸ். கமலநாதன், சிறிஸ்கந்தராசா ஆகியோரே இவ்வாறு கத்திக் குத்துக்கு உள்ளானவராவர் இது தொடர்பான விசாரணையை ஆனைக்கோட்டை பொலிஸ் சார்ஜன்ட் தில்லைத்துரை மேற்கொண்டுள்ளார்.

# "கண்ணாடி வார்ப்புகள்"

(யாழ்ப்பாணம்)

இலங்கை அவைக்காற்றுகலை கழகத்தின் "கண்ணாடி வார்ப்புகள்" நாடகம். இம்மாதம் 18ம் திகதி மாலை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் மீண்டும் மேடையேறுகிறது. இந்நாடகத்தை சு பாலேந்திரா நெறிப்படுத்தியுள்ளார்.

(கெ)

# வகுப்புவாதத்தை ஒழிக்க உயர் கமிட்டி நியமனம்

புதுடில்லி, பெப். 15

நாட்டிலிருந்து வகுப்புவாதத்தை ஒழித்து வகுப்பு ஒற்றுமைக்கான வழிவகைகளை சிபார்சு செய்வதற்காக விசேட உயர் கமிட்டி ஒன்றை இந்திய அரசு நியமித்துள்ளது.

துணைப்பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான திரு ஜெகஜீவன்ராம் தலைமையிலான இக்கமிட்டியில் உள்துறை அமைச்சர் திரு. எச். எம். பட்டேல், ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர், இந்திய காங்கிரசைச் சேர்ந்த திரு. வை. பி. சவான், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஜோதிபாஸு ஆகியோர் உட்பட தமிழ்நாடு, கேரளம், பஞ்சாப் ஆகிய மாநில முதல்வர்களும் அங்கம் வகிக்கின்றனர். [இ]

# மாணவர் போராட்டம் பெரு வெற்றி!

## இளைஞர் பேரவை கருத்து

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் உறுதியான போராட்டம் பெருவெற்றியளித்திருப்பதாகவும் மாணவரின் ஒற்றுமை அரசைப்பின் வாங்க வைத்திருப்பதாகவும் தமிழ் இளைஞர் பேரவை தெரிவித்திருக்கிறது.

மாணவர்களை ஒழுங்காக பாடசாலைகளுக்குச் செல்லுமாறும், தரப்படுத்தலுக்கெதிரான அடுத்த நடவடிக்கை பற்றி பின்னர் தமிழ்மாணவர் பேரவை எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தமது பூரண ஆதரவை வழங்குவதென்றும் இளைஞர் பேரவை மேலும்தெரிவித்திருக்கிறது. (ம)

# சிறப்புமலரை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

மெல்ல மெல்ல எம்மை 'ஈழநாடு' காரியாலயத்தைச் சுற்றிவரவைத்துவிட்டாரே! இவர் நன்றாக வானொலி கேட்பவர் போல் தெரிகிறது "வானொலி நிலையத்தில் ஒரு மணி நேரம்" நிகழ்ச்சி இவர் மனதைவிட்டு மறையவில்லைப் போலும். அதே ஸ்டைல் தான். ஆனாலும் ரசிகர்களை 'ஈழநாடு' காரியாலயத்திற்குள் அழைத்துக்கொண்டு போனதில் ஒரு அழகு. அங்கே பாருங்கள்...! இங்கே பாருங்கள்...! என்கிறார். நாமும்திரும்புகின்றோம். அது அவர்... இது இவர்... என்கிறார் பெயர்... ஊஹூம்! அது மட்டும் சொல்ல முடியாது என்று ஒரு பிடிவாதம். எமக்கும் அது தேவையில்லைத் தானே? விட்டுவிட்டோம் பிறகு சொல்கிறார் ... "தாங்கள் பெரிய பொறுமைசாலிகளாம்...! 'களீர்' என்றுபோலிக் கோபம் வருகிறது. 'உங்கள் எழுத்துப் பிழைகள் எல்லாவற்றையும் திருத்தித்திருத்திப் படித்து முடிக்கின்றோமே! எங்களுக்கு மட்டும்பொறுமை இல்லையா?" என்று கேட்கவேண்டும் போலிருக்கிறது ஆனால் கேட்கவில்லை. 'ஈழநாடு' என்ற வீட்டுக்காரர்களின் மனதை நோக வைக்கக் கூடாது என்று பொறுமையோடு மன்னித்துவிட்டோம். கட்டுரையைப்படித்து முடித்தும் ஈழநாடு பத்திரிகை நிலயத்தைப் பார்த்துவிட்ட திருப்திமனதில். இனி... நேரில் போய் பார்க்கவேண்டும் என்ற ஆசை. ஊஹூம்! திரு. மகானுக்கு எங்கள் மகிழ்ச்சியான வாழ்த்துக்கள்! நன்றிகள்!

"எவ்வளவுகவனமாக இருந்தாலும் அச்சுப்பிசாசு வென்று விடுகிறது"-ரசிகர்களை சமாதானப்படுத்துகின்றார் திரு. ஏ வி மாணிக்கம். ஏற்கமாட்டோம். பின்பு என்னவாம்? இந்தச்சிறப்பு மலரில் மட்டும் அதிகம் பிழைகள் இல்லாமல் பார்த்துக் கொண்டீர்களே...! அப்படித்தொடர்ந்தும் கவனமாக இருந்தால் என்ன?

"உங்களுக்காக நாங்கள் விழித்திருக்கிறோம்...!" அப்பாடா! பட்ட கஷ்டங்கள் எல்லாவற்றையும் நன்றாக அனுபவித்துச் சொல்லியிருக்கிறார், திரு கோபு. "எங்களுக்கு நியூஸ் தருவதற்காக எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள?"

மொத்தத்தில் எல்லோருடைய அனுபவங்களும் ஒவ்வொரு விதத்தில் சுவையளிக்கின்றன. ஒன்றைக்கூடத்தவறவிடாமல் படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது. மிகச் சிறந்த ஒரு சிறப்பு மலரைத் தந்து எம்மை மகிழ்வித்துவிட்டீர்கள். தந்தவர்களுக்குப்பாராட்டுக்கள். ஈழநாட்டிற்கு எம்வாழ்த்துக்கள். கோபு சொன்ன ஓர் உண்மையை நாம் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும் யாழ்ப்பாணத்தின் எந்த மூலையில்... என்ன நடக்கட்டும்... சரி... சரி... விடுங்கள்! நாளைக்கு ஈழநாடு பார்த்தால் எல்லாம் தெரியும்..." என்று எமக்குள் ஒரு திமிர்.

---தமிழ்ப்பிரியா

# ரூ. 500 அபராதம்

(கொக்குவில்)

சட்டவிரோத மதுபானம் விற்ற ஒருவருக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

கொக்குவில் விதியைச் சேர்ந்த முனிஆண்டி சாமி என்பவர், சட்டவிரோதமாக மதுபானம் விற்றபோது ஆனைக்கோட்டைப் பொலிசார் இவரைக் கைதுசெய்து யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். யாழ். நீதிபதி நிமால் திசநாயக்கா எதிரிக்கு 500 ரூபா அபராதம் செலுத்தும்படி தீர்ப்பளித்தார்.

# இடமாற்றம்

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு இ. கருணாநிதி சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (இ)

# விவசாயப் பயிற்சி 19ம் திகதி

[உடுப்பிட்டி]

யாழ் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய விவசாய அபிவிருத்தி சம்பந்தமான பயிற்சி வகுப்பு எதிர்வரும் 19ம் திகதி ஆரம்பமாகவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு தினங்கள் மாத்திரம் திருநெல்வேலி விவசாயப் போதனா பாடசாலையில் நடைபெறவுள்ள இப்பயிற்சி வகுப்பிற்கு யாழ் மாவட்டத்தில் உள்ள சகல விவசாயப் போதனாசிரியர்களும் 'விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்களும் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

[அ]

வெஸ்லி
(காவிப்பாசி)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்.—பத்மினி
விக்கிரமாதித்தன்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர் - பத்மினி
விக்கிரமாதித்தன்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர்.—விஜயகுமாரி
நீங்காத நினைவு

லிடோ
(யாழ். நகர்)
போன்: 7690 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமாரி - ஸ்ரீவித்யா - தங்கவேலு
ஆசை அறுபதுநாள்

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர்
(யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

5-வது வெற்றி வாரம்
ராஜா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

8-வது வாரம்
வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
போன்: 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

தினசரி 4 காட்சிகள்
ராணி
(யாழ். நகர்)
ஸ்ரீகாந்த் - லக்ஷ்மி
நடிக்க
ஜெயகாந்தனின்
ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
டைரக்ஷன் : A. பீம்சிங்

2nd Crowded Week!
Shanthi - Jaffna Phone-7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30]
MICHAEL YORK AND HIDEMI AOKI
SEVEN NIGHTS IN JAPAN
More Suitable for Adults — Eastman Color
தேன் என இனிக்கும் தீஞ்சுவை இசையும், மின் ஒளியில் வர்ண ஜாலம் புரியும் யப்பான் நகரும் உங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளட்டும்.

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சாவித்திரி
காத்திருந்த கண்கள்
(புதியபிரதி)
வெகுவிரைவில்
ராஜபார்ட் ரங்கதுரை

REGAL Now Showing
Daily at, 4-30, 7-00 & 9-30 p. m
(Jaffna) BRAD HARRIS - JOEWORKER
in
SO DARLING SO DEADLY
Action Spy Film (Color)
விநாடிக்கு விநாடி திகிலூட்டும் சண்டைக் காட்சிகள் நிறைந்தபடம்.

# அடுத்த வருட ஒலிம்பிக் போட்டிகள்

மாஸ்கோ, பெப். 15

"1980 வருட உலக ஒலிம்பிக் போட்டிகளுக்கான தயாரிப்புகள் திட்டமிட்டபடி நடைபெற்று வருகின்றன" என்று அயல்நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் மத்தியில் பேசிய சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தலைவர் கில்லானின் பிரபு மேற்கண்டவாறு கூறினார்.

சோவியத் விளையாட்டுக் கமிட்டியின் அழைப்பை ஏற்று இங்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் பிரபு கடந்தவாரம் நடந்தேறிய பல்கேரியா, ஹங்கேரி, ஜி. டி. ஆர்., ருமேனியா, மங்கோலியா, போலந்து, செக்கோஸ்லோவாக்கியா வட கொரியா, கியூபா, சோவியத் யூனியன் நாடுகளின் விளையாட்டுத்துறைத் தலைவர்களின் மகாநாடொன்றில் கலந்து கொண்டார். இதில் விளையாட்டு அபிவிருத்தி ஒலிம்பிக் இயக்கம் சம்பந்தமானபிரச்சினைகள் பற்றி கருத்துக்களை பரிமாறிக்கொண்டார்.

பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசிய கில்லானின் பிரபு இம்மகாநாடுபிரயோசனமானதென்றும், ஒலிம்பிக் இயக்கத்தின் முன்னேற்றத்துக்கு பங்களித்ததென்றும் கூறினார்.

1980 மாஸ்கோ ஒலிம்பிக் போட்டியில் தேசிய விளையாட்டுக் கோஷ்டிகள் கலந்து கொள்வது பற்றி கேட்கப்பட்டகேள்விக்குவிடையளித்த கில்லானின் பிரபு, சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியில் அங்கத்துவம் வகிக்கும் சகல தேசியக் கமிட்டிகளும் போட்டியில் கலந்துகொள்ளும்படி அதிகாரபூர்வமாக அழைக்கப்படும் என்று அவர் உறுதிப்படுத்தினார்.

1979 ஜூலையில் நடைபெறவிருக்கும் சோவியத் மக்களின் 7வது விளையாட்டு விழாவில் ஓர் அதிதியாக தான் கலந்துகொள்ளப்போவதாக பிரஸ்தாபித்த கில்லானின் பிரபு, இவ்விழா குறித்து விபரிக்கையில் சோவியத் மக்கள் தேகாப்பியாசம் செய்ய அனுபவிக்கும் சலுகை வசதி வகைகளுக்கள் குறித்து பொறுமைப்படும் அளவுக்கு அவை செழுமையாக உள்ளன என்று கூறினார்.

# கிரிக்கட்: பரி.யோவான் வெற்றி

[அரியாலை]

யாழ். பரி யோவான் கல்லூரிக்கும், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரிக்கு மிடையில் நடைபெற்ற முதலாம் பிரிவுக்கான கிரிக்கட் போட்டியில் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி 1 இனிங்சாலும், 54 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய பரி. யோவான் கல்லூரி 8 விக்கட்டுகளை இழந்து 300 ஓட்டங்களைப்பெற்று தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. பரி.யோவான் கல்லூரி சார்பில் துடுப்பெடுத்தாடிய செல்வன்கள் டி. எம். இரத்தினராசா, என். வசந்தன் ஆகியோர் முறையே 133, 127 ஓட்டங்களைப்பெற்றனர்.

மகாஜனக்கல்லூரி முதலாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுகளையும் இழந்து 139 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் 109 ஓட்டங்களையும் பெற்று வெளியேறியது. இக்கோஷ்டியின்சார்பில் விளையாடிய செல்வன்கள் எஸ். சிறிபிரகாசும், ஜெயந்தனும் முறையே 56, 56 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய பரி.யோவான் கல்லூரியைச் சேர்ந்த எஸ். தனஞ்சயன் 27 ஓட்டங்களைக் கொடுத்த 6 விக்கட்டுகளையும், ஈ. யே ஜெயரத்தினம் 42 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கட்டுகளையும் கைப்பற்றினர்.

இப் போட்டி மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. [ச]

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
High Velocity
வியட்நாம் புரட்சிக்கதை
From 17-2-79
THE LOOTERS

# சென். அன்ரனிஸ் வெற்றி

[யாழ். விளையாட்டு நிருபர்]

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் நொக்கவுட் உதைபந்தாட்டப்போட்டியில் பாஷையூர் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் 5 0 கோல்களால் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தை வெற்றியீட்டியது.

இதே சுற்றுப்போட்டியில் நாவாந்துறை சென். மேரீஸ் விளையாட்டுக்கழகம் 9-0கோல்களால் குருநகர் பாடும் மீன் "ஜி" பிரிவுகோஷ்டியை வெற்றியீட்டியது.

இன்னுமொரு போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம், அராலி சில்வஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை 10-0 கோல்களால் வெற்றியீட்டியது.

# சங்கானைக்கு நவீன சந்தை

[பண்டத்தரிப்பு]

சங்கானையில் நவீன சந்தை ஒன்றை அமைப்பதற்கு இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் இரண்டு லட்சம் ரூபாவை வட்டுக்கோட்டைத் தொகுதி எம் பி திரு. தா. திருநாவுக்கரசு ஒதுக்கியுள்ளார். [அ]

# உற்சவம்

(யாழ்ப்பாணம்)

பூநகரிப் பகுதியிலுள்ள மண்டக்கல்லாறு புனித அந்தோனியார் கோவில் திருநாள் இம்மாதம் 18ம் திகதி காலை திருநாள் பூசையின் பின் நடைபெறும் திருச்சுரூபப் பவனியுடன் விழா முடிவடையும். [அ]

# மேலும் ரூ. 50,000 ஒதுக்கீடு

[பண்டத்தரிப்பு]

காரைநகரிலுள்ள ஊரிக் கிராமத்திற்கு சிநோர் நிறுவனம் இரண்டு லட்சம் ரூபா செலவில் குழாய்நீர் விநியோகத் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தை மேலும் விஸ்தரிக்கும் பொருட்டு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி திரு. தா. திருநாவுக்கரசு இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் 50 ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

# 23 கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க கோரிக்கை

(பண்டத்தரிப்பு)

ஆசிய அபிவிருத்தி நிதி உதவி ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் வட்டுக்கோட்டை தொகுதியில் 23 கிராமிய மின் விநியோகத் திட்டங்களை இவ்வருடம் நிறைவேற்றித் தருமாறு திட்ட அமுலாக்க அமைச்சை வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு வேண்டியுள்ளார். [அ]

# நியமனம்

(புலோலி)

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற தமிழ் - சிங்கள மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றிவந்த ஏ எஸ். எம். சுபையிர் அப்பிலப்பீட்டிய மாவட்ட நீதிமன்ற தமிழ்-சிங்கள மொழிபெயர்ப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இவரது இடத்திற்கு செல்வி சரோஜினி ஜோசேப் நியமனம் பெற்றுள்ளார். [அ]

# கோட்டு ஏல விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற
வழக்கிலக்கம் பிரிவிடுதல் 7 4

1. கே. கே. எஸ். டாகம்
2. பெண் மிதுலாதேவியும் வழக்காளிகள்

எதிர்

1. செல்லையா இரத்தின சபாபதியும்.
2. பெண் தீபகாந்தியம்மாவும்
3. கனிதசிங்கம் கைம்பெண் நாகரத்தினம்
4. இ. வயித்திலிங்கம் இராசரத்தினமும்
5. பெண் தெய்வநாயகியும் எதிராளிகள்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்ற பிரிவிடுல் 714-ம் வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஆதனத்தை 1979-ம் ஆண்டு பங்குனி மாதம் 8-ம் திகதி (1979-3-8) வியாழக்கிழமை காலை 10-30 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

இந்த ஆதனம் மேற்படி வழக்கில் பிரிவிடுதல் நடவடிக்கைகளின் தீர்வையின்படி 2-ம் வழக்காளியும், 3-ம், 5-ம் எதிராளிகளும் உரித்துடையவர்களென்றும், கட்டளையிடப்பட்டு தீர்வை எழுதப்பட்டுள்ளது. மேலும் இந்த ஆதனத்தை முதலில் பங்காளருக்கிடையில் ஏலத்தில்விட்டு ஆதனத்தின் விலை மதிப்புக்குறைர்தால் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

## ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய்இறை 'வித்தாண்டி தோட்டம்' நிலப்பரப்பு 7, குளி 8 வீடும், கிணறும், தென்னை, பலா, மா, மற்றும் பயிர்வகைகளும், எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கு சின்னத்தம்பி கந்தையா, எஸ் வரதராசா அவர்களின் ஆதனங்கள், மேற்கு பாதை, தெற்கு நகரசபை றோட்டு (Lawton Road) இதடங்கலும் இந்த ஆதனம் இவ் வழக்கில் எஸ். மூத்துக்குமாரசாமி, அனுமதிபெற்ற நில அளவையாளர் மானிப்பாய், அவர்களால் தயாரிக்கப்பட்ட, 2225, 4880 நில அளவைப் படங்களில் காட்டப்பட்டுள்ளது.

மு தம்பையா
கோர்ட்டு கொமிஷனர்
அனுமதிபெற்ற நில அளவையாளரும்
விலை மதிப்பீடுபவரும்.

135, கச்சேரி-நல்லூர் வீதி
யாழ்ப்பாணம். 15-2-1979. 1639

யாழ். - கைத்தொழில்பேட்டை:

## அடுத்த மாதம் முதல் மற்றுமொரு பஸ் சேவை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்திலிருந்து, அச்சுவேலி தோப்பு கைத்தொழில் பேட்டைக்கு அடுத்த மாதம் முதல் மற்றுமொரு பஸ் சேவை நடைபெறும்.

இந்தபஸ் சேவை அடுத்த மாதம் 1ம் திகதி தொடக்கம், யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி வீதிவழியாக. புன்னாலைக்கட்டுவன்சந்தி- நிலாவரை சென்று, இராசவீதி வழியாக தோப்பு கைத்தொழில் பேட்டைவரை நடைபெறும்.

இ. போ.ச சபை வடபிராந்திய முகாமையாளர் திரு. என். தியாகராஜா, யாழ்ப்பாணம் டிப்போ அத்தியட்சகர் திரு.சே. மயில்வாகனம் ஆகியோரை' இராசவீதி பஸ் பிரயாணிகள் சங்கத்தூதுகோஷ்டி சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து மேற்படி பாதையில் மற்றுமொரு பஸ்சேவையை நடத்த உறுதி தெரிவிக்கப்பட்டது.

இராசவீதி பஸ் பிரயாணிகள் சங்கத்தினரின் மேற்படி சந்திப்பு, திரு அ. ரதசேகரம் தலைமையில் நடைபெற்றது. பிரயாணிகள் சங்கத் தூது கோஷ்டியில் திருவாளர்கள் த. பவளகேசரி, மு. கிருஷ்ணனந்தராஜா. க. பரமநாதன், க. சபாரத்தினம் ஆகியோர் இருந்தனர்.

மேற்படி பாதை வழியாகச் செல்லும் வழக்கமான பஸ்ஸை எக்காரணம்கொண்டும் நிறுத்திவிடக் கூடாதென்றும் இந்தப் பாதையில் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கும் பஸ்ஸை வேறு பாதைக்கு திருப்பிவிடக் கூடாதென்றும் சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

உணவுப் பொருட்களில்

## புற்றுநோயை ஏற்படுத்தும் சாயம்!

[கொழும்பு]

புற்றுநோயை ஏற்படுத்தக் கூடிய சாயங்கள், ஜாம், இனிப்பான பானங்கள் ஆகிய உணவுப் பொருட்களுடன் கலக்கப்படுகிறது என்று கொழும்பு மாநகர சுகாதாரப் பிரிவு கண்டு பிடித்துள்ளது.

புடவைத் தொழிலுக்குப் பாவிக்கப்படும் சாயமும் உணவுப்பொருட்களுடன் கலக்கப் படுகிறது என்றும் மாநகர சுகாதாரப்பகுதி தெரிவித்துள்ளது. [இ]

## அரவம் தீண்டி மரணம்

[யாழ்ப்பாணம்]

அக்கராயனில் உள்ள தமது வயலில் காவலுக்கிருந்த நபர் ஒருவர் அரவம் தீண்டி மரணமானார்

புங்குடுதீவைச் சேர்ந்த காசிப்பிள்ளை புவனேந்திரன் (வயது 40) என்பவரே அரவம் தீண்டி மரணமானவராவார்

அக்கராயன் கோணவில் என்ற இடத்தில் உள்ள தமது வயலில் காவலுக்கிருந்தகாலஞ் சென்றவருக்கு இம்மாதம் 7ந் திகதி இரவு அரவம் தீண்டியதாம். இதைஅடுத்து நாட்டு வைத்தியம் செய்தும் குணமடையாத நிலையில் நேற்று முன்தினம் அந்நபர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டதும் மரணமானாராம்.

மேற்கண்ட விபரங்கள் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்தது. [கை-இ]

## துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்

[கிளிநொச்சி]

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஒருவர் ஸ்தலத்திலேயே துடிதுடித்து மரணமானார். இச்சம்பவம் தர்மபுரத்தில் நடைபெற்றது. ஆண்டி செல்லத்துரை என்பவரே கொலையுண்டவராவர்.

இக்கொலை தொடர்பாக கிளிநொச்சிப் பொலிசார் சின்னத்தம்பி பொன்னையா என்பவரைச் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்துள்ளனர். இக் கொலைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் துப்பாக்கியையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

இக்கொலையில் சம்பந்தப் பட்டதாகச் சந்தேகிக்கப்படும் மற்றும் நால்வரை கிளிநொசிப்பொலிசார் தேடிவருகின்றனர். [அ]

## நெசவுப் போட்டியில் சாதனை

[அரியாலை]

அரியாலை நித்தி நெசவு நிலையத்தில் நடைபெற்ற 48 மணி நேர நெசவுப் போட்டியில் அரியாலையைச் சேர்ந்த திரு. தா. அரியரத்தினம் 74 யார் துணியை நெய்து புதிய சாதனையை நிலைநாட்டினார்.

கடந்த திங்கட்கிழமை காலை 7 35 க்கு ஆரம்பித்த போட்டி புதன் கிழமை காலை 8-35க்கு முடிவடைந்தது. இவருடன் போட்டியில் கலந்துகொண்ட நல்லூரைச் சேர்ந்த திரு.மா. மனோகரநாதன் 48 மணி நேரத்தில் 70 யார் துணியை நெய்து இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார்.

போட்டியில் கலந்து கொண்ட கலைமகள் வீதியைச்சேர்ந்த திரு. மா. தவதாஸ் 45 மணித்தியாலயம் தொடர்ந்து நெய்து $65\frac{1}{2}$ யார் துணியை நெய்து தொடர்ந்து நெய்ய முடியாத காரணத்தினால் போட்டியிலிருந்துவிலகிக் கொண்டார்.

போட்டியாளர்களை உற்சாகப்படுத்துமுகமாக ஏராளமானோர் இரவும்-பகலும் நெசவு நிலையத்திற்கு வந்து போட்டியாளர்களுக்குத் தமது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

இந்தச் சாதனையை முறியடிக்கும் எவருடனும் தாம் போட்டியிடத் தயாராக இருப்பதாக நெசவு தொழிலில் சாதனையை நிலைநாட்டியுள்ள திரு. தா. அரியரத்தினம் நமது நிருபரிடம் தெரிவித்தார். [அ]

## அஞ்சலிக் கூட்டம்

(கொக்குவில்)

நயினை நாகபூஷணியம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் இயற்கை எய்தியதையொட்டி இன்று மாலை யாழ். நாயன்மார்க்கட்டு ஸ்ரீராஜராஜேஸ்வரி பேச்சியம்பாள் ஆலயத்தில் அஞ்சலிக்கூட்டமொன்று நடைபெறும்.

யாழ். நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில், வித்துவான் க. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் செ. தர்மலிங்கம், சிவஸ்ரீ க. சாம்பசிவக் குருக்கள் உட்படப் பலர் உரை நிகழ்த்துவர்.

### விற்பனைக்கு

வசாவிளான் சந்தியில், அச்சுவேலி வீதியில், கல்வீடு வளவும், பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிக்கு முன்பாகத் தெல்லிப்பழை வீதியில் விவசாயம் செய்யக்கூடிய காணியும் (வீடு கட்ட) விற்பனைக்குண்டு. இராசையா, வசாவிளான் சந்தி என்னும் மூகவரியில் ஞாயிற்றுக்கிழமைகாலையில் தொடர்பு கொள்ளலாம். 1651

### தேவை

எடுப்பான தோற்றமுள்ள இளம்பெண் வரவேற்பாளர் பதவிக்கு இன்று பி. ப. 2-00 மணிக்கு நேரில் வரவும். கல்வித் தகமைகள் அவசியமில்லை. வெளிவாரிப் பட்டப் படிப்புகள் நிறுவனம், 148/1, ஸ்ரான்லி வீதி [மேல் மாடி] யாழ்ப்பாணம். 1650

## அரசின் நடவடிக்கைக்கு ஆசிரிய சங்கம் பாராட்டு

[யாழ்ப்பாணம்]

"தமிழ் மாணவர்களைப் பாதிக்கும் தரப்படுத்தலை ஆட்சேபித்து யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்தமைக்காக, அவர்கள் மீது விதித்த நிபந்தனைகளை அரசு வாபஸ்செய்ததற்காக இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளை தனது நன்றியை அரசுக்குத் தெரிவித்துள்ளது"

இவ்வாறு இலங்கைத்தேசிய ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்டச் செயலாளர் திரு. எம் குமாரசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## ஒரு கடைக்கு ரெண்டர் ரூ. 30,166

(யாழ்ப்பாணம்)

யாழ். பொன்னம்பலம் வீதியில், புதிதாக கட்டப்பட்ட கடை, யொன்றுரெண்டருக்கு வழங்கியதன் மூலம் யாழ். மாநகரசபைக்கு 30, 166 ரூபா கிடைத்துள்ளது!

இக்கடை முன்னர் 12,000 ரூபாவிற்கு ரெண்டர் மூலம் கொடுக்கப்பட்டிருந்தது.

கடையைப் பெற்றவர் ஒரு நாள் தாமதித்து உரிய பணத்தைக் கட்டமுன் வந்ததால், கடை ரத்துச்செய்யப்பட்டது.

புதிதாக அக்கடைக்கு ரெண்டர் கோரியதன் மூலம் 18,000 ரூபா கூடுதலாகக் கிடைத்துள்ளது. [க]

ஆனைக்கோட்டையில்

## ஒருபெண்ணின் துணிகரம்!

(கொக்குவில்)

நள்ளிரவு நேரத்தில் கைம்பெண் ஒருவரோடு தகாத முறையில் நடக்க முயற்சித்த ஒருவரை அப்பெண் கத்தியால் வெட்டினாராம்.

இத்துணிகரச் சம்பவம் செவ்வாய்க்கிழமை இரவு ஆனைக்கோட்டையில் நிகழ்ந்தது.

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கார்த்தி செல்லையா என்பவர், அதே இடத்தைச் சேர்ந்த கைம்பெண் பவளராணி என்பவருடைய வீட்டிற்கு நள்ளிரவில் சென்று அப்பெண்ணைப் பலவந்தப் படுத்தி தகாத முறையில் நடக்க முற்பட்டாராம். அதனால் ஆத்திரம் கொண்ட அப்பெண் அவரை கத்தியால் வெட்டிப் படுகாயப் படுத்தினாராம்.

படுகாயத்திற்குள்ளான கார்த்தி செல்லையா யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆனைக் கோட்டைபொலிஸ்சார்ஜன்ட் தில்லலன்துரை, பவளராணியை விசாரணையின் பொருட்டு காவலில் வைத்துள்ளார்.

## 'வித்தி'யின் நூல்வெளியீடும் பாராட்டும்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நியமனமானதைபாராட்டுமுகமாக நாளை சனிக்கிழமை முத்தமிழ் வெளியீட்டுக் கழகம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் விழா எடுக்கிறது. இவ்விழாவில் பேராசிரியர் வித்தியின் 'தமிழியற் சிந்தனை' என்ற கட்டுரைத் தொகுப்பு நூலும் வெளியாகும். கழகத் தலைவர் கலாநிதி அ. சண்முகதாஸ் தலைமையில் நிகழும் இவ்விழாவிலே பல அறிஞர்களும், பெரியார்களும், அவரின் மாணவர்களும் கலந்துகொண்டு தமது பாராட்டுகளைத் தெரிவிப்பார்கள்.

## பொலிஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். பொலிஸ்நிலையத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை. சிலை நிறுவுவதற்கான அனுமதியை யாழ். மாநகர சபையே வழங்கும்.

இவ்வாறு யாழ் மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. எகொடப்பிட்டியா, சிலை நிறுவுவதற்குப் பொலிஸ் அனுமதி மறுப்பு என்று வெளியான செயதி குறித்து (ஈழநாடு அல்ல) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் முன் சிலை நிறுவ அனுமதிபதகுரப் பொலிஸாருக்கு எந்தவித உரிமையும் இல்லையென்றும் அவ் விஷயம் யாழ். மாநகரசபையைப் பொறுத்ததென்றும், சிலை நிறுவுவதற்கு விளம்பரம் செய்ய ஒலிபெருக்கி பாவிப்பதற்கான அனுமதி வழங்குவதே பொலிஸாரின் பொறுப்பாகும். இப்படியான செய்திகள் பொலிஸாருக்கும் பொது மக்களுக்குமிடையே தவறான அபிப்பிராயத்தை ஏற்படுத்துமென்றும் அவர் கவலை தெரிவித்துள்ளார்.

## யாழ். நவீன...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பகுதி, தொகை பகிரங்கமாக வாசிக்கப்பட்டது. பின் ரெண்டர் பத்திரங்கள் யாவும் மூடிசீல் வைக்கப்பட்டது.

சபையிலிருந்த திரு. கோபால் என்பவர் எழுந்து பிரபல வர்த்தகர் ஒருவரும் இங்கு வந்திருப்பதாக, ஆணையாளரிடம் சுட்டிக் காட்டினார். இதற்குப்பதிலளித்த ஆணையாளர் டெண்டர் கேட்க எவருக்கும் உரிமை உண்டென்றும், இதில் பாகுபாடு இல்லையென்றும் கூறினார்.

விண்ணப்பதாரர் மத்தியில் பெண்ஒருவரும் காணப்பட்டார். நள்ளிரவு 12-55 மணிக்கு ரெண்டர் யாவும் பகிரங்கப்படுத்தப்பட்டு முடிவடைந்தது.

ரெண்டர்கள் யாவும் ஒழுங்காகப் பரிசிலனை செய்யப் பட்டபின் அறிவிக்கப்படும் என்று ஆணையாளர் தெரிவித்தார்.

பொன்னம்பலம் வீதி, இ போ.ச காரியாலய பின்பக்கத்திலுள்ள பகுதியிலுள்ள 14 கடைகளை கூடிய கேள்வி ஒரு லட்சத்து ஏழாயிரம், ஒரு லட்சத்து ஐயாயிரம், ஒரு லட்சத்துமூவாயிரம் ரூபாவாகும்.

ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பகுதி ஒன்றில் உள்ள 6 கடைகளின் கூடிய கேள்வி 97,000 ரூபா வாகும்.

உள்பகுதியிலுள்ள மிகச் சிறிய கடைகளின் கூடிய கேள்வி 22,000 ரூபாவாகும்.

உள்பகுதியிலுள்ள பெரிய கடைகளின் கூடிய கேள்வி 63, 000 ரூபாவாகும். [க]

## தொண்டமானாறு நன்னீர் திட்டம் பூரண வெற்றி

(உடுப்பிட்டி)

தொண்டமானாறு உப்பாற்றுப்பிரதேசத்தில் நன்னீர்த் திட்டத்தின்கீழ் நிலத்தின் அடியில் உள்ள நன்னீரைக் குழாய்க் கிணறுகள் மூலம் உணவு உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்கான பரிசோதனைகள் பூரண வெற்றியை அளித்துள்ளது என்று யாழ் அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னாண்டோ அறிவித்துள்ளார்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நிலநீர் ஆராய்ச்சிப்பிரிவு இதுசம்பந்தமான பரிசோதனைகளை தொண்டமானாற்றைச் சுற்றியுள்ள 55 சதுர மைல் பிரதேசத்தில் மிகவும் நுணுக்கமாக மேற்கொண்டிருந்ததென்றும், இந்த ஆய்வின்போது தொண்டமானாறு உப்பாற்றுப்பிரதேசத்தின் நிலத்தின் அடியிலுள்ள நன்னீர் நீரோட்டங்கள் பற்றியும், ஊற்றுக்கள் பற்றியும் ஆராயப்பட்டதுடன் நிலஅடிமட்டத்தில் நீர்த்தேக்கங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளதென்றும் அவர் தெரிவித்தார்.

அச்சுவேலி புத்தூர், சுன்னாகம், சங்கானை, வட்டுக்கோட்டை, தொல்புரம் முதலிய பகுதிகளிலும், கரையோரப்பகுதிகளிலும் குழாய்க் கிணறுகள் தோண்டப்படவிருக்கின்றன. குழாய்க் கிணறுகள் சம்பந்தமான ஆய்வுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice The Eelanaa lu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 889, Registered as a News paper in Sri Lanka.-